# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

8069886

C

1. District மாவட்டம் : VELLORE  PS காவல்நிலையம் : VIGILANCE & ANTI - CORRUPTION, VELLORE.  Year ஆண்டு : 2020  FIR No. மு.த.அ. எண் : 9/2020  Date நாள் : 30.10.2020

2. (i) Act சட்டம் : PREVENTION OF CORRUPTION ACT  Sections பிரிவுகள் : 7 OF P.C. Act 1988
   (ii) Act சட்டம் : 1988 as amended by the P.C  Sections பிரிவுகள் : as amended by P.C.
   (iii) Act சட்டம் : (Amendment) Act 2018.  Sections பிரிவுகள் : (Amendment) Act 2018 and 102 Cr.P.C.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் —  Date to : நாள் வரை PRIOR TO 29.10.2020 12.00hrs.
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.10.2020  Time நேரம் : 13.30hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-II 2020  Time நேரம் : 13.30hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  TAMIL TYPED COMPLAINT.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  NORTHEAST DIRECTION - 20kms.
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி TIRUVALAM TOWN PANCHAYAT OFFICE, TIRUVALAM, VELLORE DISTRICT.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. JOTHI  (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் SAMPATH
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1965  (d) Nationality நாட்டினம் : INDIAN.  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் : DEPUTY INSPECTION CELL OFFICER.  (g) Address முகவரி : OFFICE OF THE DISTRICT INSPECTION CELL OFFICE, VELLORE COLLECTORATE, VELLORE.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. S. VENKATESAN (41/2020) S/o Subramani, Executive officer, Thiruvalam Town Panchayat, Vellore District.
   2. V. DURAI (34/2020) S/o Veeraraghavan, Junior Assistant, o/o the Thiruvalam Town Panchayat office, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   "NO - DELAY"

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 30/10/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

S. Vijayalakshmi 30/10/20

15. Date & Time of despatch to the court: 30.10.2020.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. VIJAYALAKSHMI
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண்
VIGILANCE & ANTI-CORRUPTION
VELLORE.

**SUBMITTED:**

இன்று 30.10.2020-ஆம் தேதி 11.30 மணியளவில் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.S.ஜோதி, மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: வேலூர் 30.10.2020 S.ஜோதி, மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அம்மையீர், பொருள்: திடீர் ஆய்வு சோதனை - வேலூர் மாவட்டம் - திருவலத்தில் உள்ள திருவலம் முதல் நிலை பேரூராட்சி அலுவலகத்தில் 29.10.2020-ஆம் தேதி இருதுறை திடீர் கூட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டு, முகாந்திரம் கூற இயலாத மற்றும் உரிமை கோராத பணம் மற்றும் ஆவணங்கள் - ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நான் ஒருங்கிணைந்த வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலராக உள்ளேன். நேற்று 29.10.2020-ஆம் தேதியன்று பகல் 12.00 மணியளவில் நான் பணியில் இருந்தபோது, திருவலம் முதல் நிலை பேரூராட்சி அலுவலகத்தில் 29.10.2020 ஆம் தேதியன்று திருவலம் முதல் நிலை பேரூராட்சிக்கு தேவையான பொருட்களை வாங்கியதாக சம்மந்தப்பட்ட கடைகளின் உரிமையாளர்களிடம் இருந்து போலியான பில் பெறப்பட்டு, அந்த கடை உரிமையாளர்களுக்கு காசோலைகள் வழங்கப்படுவதாகவும், அந்த கடை உரிமையாளர்கள் வங்கியில் காசோலையை பணமாக்கிய பின் கடை உரிமையாளர்களுக்கு கமிஷன் கொடுத்து மீதிப்பணத்தை செயல் அலுவலர் திரு.வெங்கடேசன் என்பவர் பெற்றுக்கொள்ளுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலினை, நான் எனது நம்பகமான தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு பகல் சுமார் 13.30 மணிக்கு தெரியப்படுத்திய பின் 29.10.2020-ஆம் தேதி பகல் சுமார் 14.30 மணியளவில் நானும், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.S. விஜயலட்சுமி மற்றும் குழுவினருடன், மேற்படி திருவலம் முதல் நிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து சேரப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் சென்று பார்க்க, அங்கு பேரூராட்சி அலுவலக ஹாலில் மூன்று நபர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்த காரணத்தினால், சிறிது நேரம் கழித்து அவர்களிடம்

இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, தங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த அவர்களை யாரென்று விசாரிக்க, முதலாமவர் தன்னுடைய பெயர் வெங்கடேசன் என்றும், செயல் அலுவலராக பணி செய்து வருவதாகவும், அவருக்கு அடுத்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் துரை என்றும், இளநிலை உதவியாளாராக பணிபுரிந்து வருவதாகவும், மூன்றாமவரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் கலைமணி என்றும், தான் காவேரிபாக்கம், அம்மூர் மற்றும் திருவலம் பேரூராட்சிகளுக்கு பணி ஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தனர். மேலும், அந்த ஹாலில் சில பெண்களும், சில ஆண்களும் இருந்தனர். மேற்படி மூன்று நபர்களில், செயல் அலுவலர் திரு.S.வெங்கடேசன் என்பவரை திரேக சோதனை செய்ய, அவரது வெளிப்புற சட்டை பாக்கெட்டில் பணம் ரூ.500/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க அவர் அந்த பணத்தை சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால் அந்த பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் இளநிலை உதவியாளர் திரு.V.துரை என்பவரை திரேக சோதனை செய்ய, அவரது பேண்ட்டின் இடது புற பாக்கெட்டில் பணம் கத்தையாக இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.37,200/- (500x74=37,000/- மற்றும் 200x1=200) இருந்தது. அந்த பணம் குறித்து திரு.துரை என்பவரிடம் விசாரிக்க அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அந்த முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.37,200/- வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.துரை அவர்களின் பேண்ட்டின் பின்புற இடது பக்க பாக்கெட்டை சோதனை செய்ய ஒரு மணி பர்ஸ் இருந்தது. அதை சோதனை செய்ய அதில் ரூ.650/- இருந்தது. அந்த பணம் பற்றி திரு.துரை அவர்களிடம் விசாரிக்க அது தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்துள்ள பணம் என்று சொன்னதால் அந்த பணம் ரூ.650/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், அங்கிருந்த நபர்களை விசாரித்து சோதனை செய்த விவரம் குறித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இரு துறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மேற்படி முதல்நிலை பேரூராட்சி அலுவலகமானது திருவலம் அருள்மிகு வில்வநாதீஸ்வரர் கோயிலுக்கு எதிர் திசையில் கிழக்கு மேற்காக உள்ள வணிகர் தெருவில் வடக்கு நோக்கியவாறு உள்ள அரசு கட்டிடத்தில் முதல் தளத்துடன் இயங்கி வருகிறது. அந்த அலுவலகத்தில் இருந்த இளநிலை உதவியாளர் திரு.துரை அவர்களின் அறையை சோதனை செய்தபோது அவருடைய இருக்கைக்கு வலதுபுறத்தில் இருந்த ஸ்டீல் பீரோவிற்கு கீழே சோதனை செய்ய, அங்கு

சந்தேகத்திற்கிடமான வகையில் ஒரு Tieing Pad-ல் தேதி, தொகை, பூர்த்தி செய்யப்படாத பில்கள், இரசீதுகள், லெட்டர் பேடு தாள்கள், RI Stamp ஒட்டப்பட்ட ஒப்புதல் இரசீதுகள் ஆகியவை ஒரு Tag-ல் கோர்க்கப்பட்டு இருந்தன. அவற்றை ஒவ்வொன்றாக பார்வையிட்டு அதன் விவரங்கள் இரு துறை கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்து செயல்முறையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மேற்படி பீரோவிற்கு அடியில் சந்தேகத்திற்கிடமான வகையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் குறித்து இளநிலை உதவியாளர் திரு.துரை மற்றும் செயல் அலுவலர் திரு.வெங்கடேசன் ஆகியோர்களை விசாரிக்க, அவர்கள் பதிலேதும் சொல்லவில்லை. அந்த ஆவணங்கள் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், இளநிலை உதவியாளர் அறையில் இருந்து மேற்கு திசையில் உள்ள வாயிலின் வழியாக செல்ல அங்கு சுமார் 12'x10' அளவுள்ள குளியல் மற்றும் கழிவறையுடன் கூடிய செயல் அலுவலர் அறை உள்ளது. அந்த அறையில் வடக்கு நோக்கியவாறு செயல் அலுவலரின் இருக்கையும் மேஜையும் போடப்பட்டிருந்தன. செயல் அலுவலரின் அறையில் வடமேற்கு திசையில் சிமெண்ட் அலமாரி உள்ளது. அந்த அலமாரிக்கு பக்கத்தில் உள்ள ஒரு ஆறடி உயர ஸ்டீல் பீரோ ஒன்று பூட்டப்பட்டு இருந்தது. அந்த பீரோவின் சாவி குறித்து செயல் அலுவலர் திரு.வெங்கடேசனிடம் விசாரிக்க, அவர் திரு.நாகராஜன், பேரூராட்சி பிளம்பர் என்பவரை அழைத்து, இளநிலை உதவியாளர் திரு.துரை அவர்களின் மேஜை இழுவறையில் இருந்து பீரோவின் சாவியை எடுத்து வந்து திறக்குமாறு சொல்ல அவரும் திறந்துவிட்டார். அந்த பீரோவை சோதனை செய்ய, அந்த அறையில் இருந்த இரும்பு பீரோவில் உள்ள அடுக்குகளில் வழக்கு சம்மந்தமான பணமோ அல்லது பொருளோ இல்லை. ஆனால், அந்த பீரோவின் இரகசிய அறையை சோதனை செய்ய அதில் கத்தையாக 200 ரூபாய் நோட்டுகள் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.15,000/- (Rs.200x75=15,000) இருந்தது. அந்த பணம் குறித்து செயல் அலுவலர் திரு.வெங்கடேசன் அவர்களிடம் விசாரிக்க, அவர் பணம் தன்னுடையது இல்லை என்றும், பணம் இருந்த அந்த பீரோவை நான் திறப்பதே இல்லை என்று சொன்னார். மேலும், அந்த அலுவலகத்தில் இருந்த மற்றவர்களையும் விசாரிக்க, அவர்களும் தங்களுக்கு தெரியாது என்று சொன்னார்கள். எனவே, யாரும் உரிமை கோராத அந்த பணம் ரூ.15,000/- வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. பின்னர், செயல் அலுவலர் திரு.வெங்கடேசன் அவர்களிடம் திருவலம் முதல் நிலை பேரூராட்சி அலுவலக பதிவேடுகளை கேட்க, அவர் 13 ஆவணங்களை ஆஜர் செய்தார். அவற்றின் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இரு துறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதிவேடுகளை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், செயல் அலுவலர் திரு.வெங்கடேசன் அவர்களிடம் இந்த மாதம் (அக்டோபர்-2020) செலவினப்பட்டியல்கள் குறித்து கேட்க, அதை அவர் இளநிலை உதவியாளர் திரு.துரை அவர்களிடம் இருந்து கேட்டுப் பெற்று ஆஜர் செய்தார். அவற்றை பார்வையிட, அதில் செலவினச்சீட்டு BPV No.633, dt:01.10.2020 முதல் BPV.No.689, dt:20.10.2020 வரை இருந்தது. அதில் மொத்தம் 56 செலவினச்சீட்டுகளும், அது தொடர்பான ஆவணங்களும் இருந்தன. அந்த 56 செலவினச்சீட்டுகளும் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், திருவலம் முதல் நிலை பேரூராட்சி அலுவலக வங்கி கணக்குகள் குறித்து செயல் அலுவலர் திரு.வெங்கடேசன் அவர்களிடம் கேட்க, அவர் திரு.துரை, இளநிலை உதவியாளர் அவர்களிடம் இருந்து வங்கி புத்தகங்களை கேட்டு பெற்று ஆஜர் செய்ததை பார்வையிட்டு, அவற்றின் விவரங்கள் குறிக்கப்பட்டு மீண்டும் அவை செயல் அலுவலர் திரு.வெங்கடேசன் அவர்கள் வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையில், தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.37,200/- மற்றும் உரிமை கோராத பணம் ரூ.15,000/- ஆக மொத்தம் ரூ.52,200/- (Rs.500x74=Rs.37,000/- & Rs.200x76=Rs.15,200/-) மற்றும் மேற்குறிப்பிட்ட ஆவணங்களும் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டன. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, மேற்படி திருவலம் முதல் நிலை பேரூராட்சி அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், திரு.S.வெங்கடேசன், செயல் அலுவலர், முதல் நிலை பேரூராட்சி அலுவலகம், திருவலம், வேலூர் மாவட்டம், இளநிலை உதவியாளர் திரு.துரை மற்றும் மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த நபர்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், ஆஜரில் இருந்த பெண்கள் கண்ணியம் குறையாமல் நடத்தப்பட்டனர். மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை திடீர்சோதனை செயல்முறை தயார் செய்து, அதில் நானும், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.S.விஜயலட்சுமி, திருவலம் முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.S.வெங்கடேசன் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். அதன் நகல் திருவலம் முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.S.வெங்கடேசன் மற்றும் இளநிலை உதவியாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. 29.10.2020-ஆம் தேதி நடைபெற்ற இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, திருவலம் முதல் நிலை பேரூராட்சி அலுவலகத்தில் பேரூராட்சிக்கு தேவையான

பொருட்களை வாங்காமலேயே வாங்கியதாக சம்மந்தப்பட்ட கடைகளின் உரிமையாளர்களிடம் இருந்து பில் பெறப்பட்டு, அந்த கடை உரிமையாளர்களுக்கு காசோலைகள் வழங்கி அந்த கடை உரிமையாளர்கள் வங்கியில் காசோலையை பணமாக்கிய பின் கடை உரிமையாளர்களுக்கு கமிஷன் கொடுத்து மீதிப்பணத்தை பெற்றுக்கொள்வதை வாடிக்கையாக கொண்டும் மற்றும் தன்னுடைய அறையில் உள்ள பீரோவில் கோரப்படாத லஞ்சப்பணம் ரு.15,000/- வைத்திருந்த திருவலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.S.வெங்கடேசன் என்பவர் மீதும், கணக்கு காட்ட முடியாத மற்றும் தக்க முகாந்திரம் கூற இயலாத லஞ்சப்பணம் ரு.37,200/- வைத்திருந்த திரு.V.துரை, இளநிலை உதவியாளர் திருவலம் முதல்நிலை பேரூராட்சி வேலூர் மாவட்டம் என்பவர் மீதும் சட்டப்படி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் மற்றும் கணக்கு கூற இயலாத பணம் ரு.52,200/-, வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் சோதனை சம்மந்தமான அசல் செயல்முறை ஆகியவற்றை நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். ஒம்/- xxxxxxxxxxx (S.ஜோதி) 30/10/2020 மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir,

Received the complaint on 30.10.2020 at 11.30 hrs and registered a case in Vellore Vigilance and Anti Corruption Cr.No.9/2020 U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. Sd/-xxxxxxxx (S.Vijayalakshmi) 30/10/2020 Inspector of Police Vigilance and Anti-Corruption Vellore-1.

Sir,

The FIR in original along with the complaint, Joint Surprise check proceeding in original sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

S. Vijayalakshmi
30/10/2020

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Vellore - 1.